முரசொலி

ஆசிரியர் மு. கருணாநிதி

வார இதழ்

முரசு 3 | 8–2–57 வெள்ளி | ஒலி 44

ஓட்டர் வேட்டைக்குத் தயாராகிறார், 'பச்சைத் தமிழர்'!

நல்லோரே கூறுங்கள்! நீதி இது தானு?

மாறன், எம். ஏ.

வடக்கு வாழ்கிறது; தெற்கு தேய்கிறது என்று நாம் உண்மையைப் படம் பிடித்துக்காட்டும் நேரத்திலே சிறிப் பாய்கிருர்கள் ஏக இந்தியப் பித்தர்கள்!

வடக்காவது; தெற்காவது; திட்டங்கள் அனைத்தும் பாரதத்தின் மொத்த வளர்ச்சிக்குத் தானே செலவிடப்படுகின்றன—என்று ஆறுதல் கூறிப் புண்ணுகிப் போயிருக்கும் தென்னக மாந்தர் மனதிலே புனுகு பூசும் மாய மந்திர வேலைகளிலே ஈடுபடுகிருர்கள். திருவிடம் வறுமையிலே உழன்ருல்தான்; வளமற்று இருந்தால்தான் ஆதிபத்தியக் காரியங்களை டெல்லி சரிவரச் செய்ய முடியும் என்பதிலே அக்கறைகொண்ட சூதுக்காரர்கள்!

திட்டத்திலே உரிய பங்கு தெற்கே ஒதுக்கப்படவில்லை—என்று நாம் கூறிய அன்று, அமைச்சர்களும், கனம்களும் கூட அதை ஆமோதித்திடும் வகையிலே வடநாட்டு மூலவர்களிடம் மறைமுகமாக வாதாடினுர்கள்! மித்திரனும் இங்குள்ள தேசிய ஏடுகளும் கூட கேலிச் சித்திரங்கள் தீட்டி; வடக்கத்திய சேட்டுகளின் பார்வைக்கு கேலிச் சித்திரங்களாகக் காட்சிதரும் தென்புல மாந்தரின் நிலையை விளக்கிக் காட்டியிருக்கின்றன!

ஆனுல் இன்றோ, தேர்தல் நெருங்கி வரும் இந்த நேரத்திலோ, அதையெல்லாம் மறைக்க முற்பட்டுவிட்டார்கள் தேசியத் தோழர்கள்!

அவர்களோடு போட்டியிட்டுக் கொண்டு; தி. மு. க. தவிர்த்த இதர எதிர்க் கட்சியாளர்களும் மெழுகு பூசி மறைக்கும் அந்த சூழ்ச்சி வேலைகளிலே ஈடுபட்டிருக்கிருர்கள்!

தெரியும் அவர்கட்கு தென்னகத்திற்கு ஐந்தாண்டுத் திட்டங்களிலே சம பங்கு மறுக்கப்பட்டிருக்கிறது — என்கிற உண்மை! இதை உணரமுடியாத அளவுக்கு அவர்கள் குழந்தைகளுமல்ல!

பின்னர் ஏன் அவர்கள் மெய்யைப் பொய்யாக்கும் பாழும் பணியில் ஈடுபட்டிருக்கிருர்கள்?

இரண்டே காரணங்கள் தான், அதற்கு! ஒன்று ஏக பாரத மாயை அவர்களது சிந்தனைச் சுதந்தரத்தைப் பறித்துக் கொண்டு, அவர்களை குருடர்களாக; டெல்லி மூலபீடம் ஏற்றியிருக்கும் சுமைகளை உணர முடியாத கூனர்களாக மாற்றியிருக்கிறது!

அடுத்தது; இந்த உண்மையை ஒப்புக் கொண்டு; ஆமாம்; தென்னகம் புறக்கணிக்கப்படுகிறது—என்பதைச் சங்கநாதம் செய்வார்களேயானுல், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு நாட்டிலே ஆதரவு வலுத்துவிடுமே—என்று அஞ்சி நடுங்குகிருர்கள்! இந்த ரகசியப் பின்னணியிலேதான் வடநாட்டு அரசின் மோசத் திட்டத்திற்கு வக்காளத்து வாங்கும் பிரச்சாரத்தை அவர்கள் நடத்திக் கொண்டு வருகின்ருர்கள்!

அதோ, இருக்கும் பட்டியலைப் பாருங்கள்!

வடநாட்டு மாநிலங்களிலேயே அதிகப்படியாக மூலதனம் செலவிடப்படும் மாநிலம் பம்பாய்! அதற்கு ஒதுக்கப்பட்டிருக்கும் தொகையோ 129 கோடி ரூபாய்!

அதே நேரத்தில் தென்னுட்டிலே இதர மாநிலங்களிலேயே மிகவும் அதிகப்படியாக மூலதனம் செலவிடப்படும் மாநிலம் ஆந்திரம்; ஆனுல் அப்படி மிக அதிகமாக ஒதுக்கப்பட்டிருக்கும் தொகை எவ்வளவு இருக்குமென நினைக்கிறீர்கள்?

பம்பாய் மாநிலத்தைப்போல் சுமார் 129 கோடி ரூபாய் இருக்குமா? அல்லது அதற்குச் சமீபத்திலாவது இருக்குமா? குறைவு எனில் பத்து அல்லது இருபது கோடிகள் குறைந்ததாக இருக்குமா?

—இப்படியெல்லாம்தான் கேள்வி கேட்கத் துடிக்கும்! ஆனுல் விடையோ ஏமாற்றம்! மாபெரும் ஏமாற்றம்!!

ஆமாம்; தென்னகத்தில் மிக அதிகமாக செலவாகப் போகும் தொகை — முதலீடு செய்யப் போகும் தொகை 15 கோடியே 61 லட்சம் ரூபாய்கள்தான்!

பம்பாய் விழுங்கும் தொகையில் அரைக்கால் பங்குகூட ஆந்திராவுக்குக் கிடைக்கவில்லை!

வடநாட்டிலே மிகக் குறைந்த அளவு முதலீடு செய்யப்பட்டிருக்கும் மாநிலமான ராஜபுதனம்கூட 14 கோடி ரூபாய்களைப் பெறுகிறது!

ஆனுல் தென்னுட்டில் இரண்டாவது திட்டத்தின் கீழ் 'மிக அதிகமாக' முதலீடு செய்யப்பட்டிருக்கும் ஆந்திராவுக்கோ, வடக்கே 'மிகக் குறைந்தஅளவு' முதலீடு செய்யப்பட்டிருக்கும் ராஜபுதனத்திற்குக் கிடைப்பதைவிட 1 கோடியே 61 லட்சம் ரூபாய்கள்தான் அதிகமாகக் கிடைக்கின்றன!

—இது வடநாட்டு ஆதிபத்திய அரசின் ஓரவஞ்சகப் போக்கை விளக்குவதற்கு!

இதோ — இன்னென்றைப் பாருங்கள்!

இங்கே சென்னையைவிடச் சிறிய மைசூர் 4 கோடியே 78 லட்சம் ரூபாய் பெறுகிறது!

திருவாங்கூர் கொச்சிக்குக் கூட 5 கோடியே 64 லட்சம் ரூபாய்கள் கிடைக்கின்றன!

ஆனுல் இவை இரண்டினும் பெரிய சென்னைக்குக் கிடைப்பது எவ்வளவு தெரியுமா?

4 கோடியே 69 லட்சம் ரூபாய்கள்தான்!

ஏன் இந்த நிலைமை? மைசூரைவிட சென்னையின் பங்கு சில லட்சம் ரூபாய்கள் குறைந்தது ஏன்?

மாநிலங்கள்	2-வது திட்டத்தின் கீழ் செய்யப்பட இருக்கும் முதலீடு			
வடக்கே!		கோடி	லட்சம்	ரூபாய்
பம்பாய்		129		..
பீகார்		63		..
உத்தரப் பிரதேசம்		44		..
மேற்கு வங்கம்		26		..
மத்தியப் பிரதேசம்		18		..
ராஜபுதனம்		14		..
தெற்கே!				
ஆந்திரம்	15	கோடி	61லட்சம்	..
சென்னை	4		69	..
மைசூர்	4		78	..
திரு கொச்சி	5		64	..
ஐதராபாத்	10		90	..

திருவாங்கூர் கொச்சியைவிட சென்னைக்கு வரவேண்டியது தாழ்ந்தது எவ்விதம்?

கேள்விகள்தான் இரண்டு ஆனுல் பதில் ஒன்றே ஒன்றுதான்!

காமராசர் ஆட்சியின் கையாலாகாத்தனம்! காமராசரின் கையாலாகாத்தனம்!

—அதுதான் வடநாட்டு ஆட்சி பீடத்திடமிருந்து சென்னைக்கு வரவேண்டியதைப் பெற்றிட முடியாமல் தடுத்து நிறுத்திவிட்டது!

வடக்கு மறுத்த மறுகணமே "ஏ, நேர்மையற்ற நேரு அரசே! ஒழித்துவிடு உன் ஓரவஞ்சகத்தை; இல்லையேல் எடுத்துக் கொள் எனது ராஜிநாமாவை" என்று எழுதி நீட்டியிருக்க வேண்டும், காமராசர்!

அவர் செய்யத் தவறிவிட்டார்; போராடிப் பெறுவதற்குப் பயந்து சாகும் தொடைநடுங்கியாக மாறிவிட்டார்; எனவேதான் சென்னையின் பங்கு மற்ற மாநிலங்களது பங்குகளோடு ஒப்பிடும்போது மலையும் மடுவுமாய் ஆகிவிட்டது!

உதய சூரியன் போல் எழுந்து நிற்கும் இந்த உண்மையை தேசியத் தோழர்களும் ஏடுகளுமே அவமானத்துடன் ஒத்துக் கொள்ளும் வேளையில்தான் நல்ல எதிர்க் கட்சி என்று பெயரெடுக்க வேண்டிய கம்யூனிஸ்ட்டுகளின் 'ஜனசக்தி' நம்மைக் கேலி செய்திருக்கிறது!

இரண்டாவது திட்டத்தின் கீழ் மொத்தம் 4800 கோடி ரூபாய் செலவாக இருக்கிறதல்லவா? அந்தத் தொகையினைச் செலவிட சில அடிப்படைகள் வேண்டுமே! அவை என்னென்ன என்று அது கூறும் விதத்தைப் பாருங்கள்:

இந்த நாட்டின் நலனிலே கடுகளவும் அக்கறை கொள்ளாத வெள்ளைக்காரன் ஆட்சி காலத்திலே, தேசத்தின் சகலப் பகுதிகளும் ஒரே மாதிரியாக வளர்ச்சியடையவில்லை. பம்பாயை விடத் தமிழகம் பின் தங்கியிருந்தது; தமிழகத்தைவிட ஆந்திரமும், கேரளமும் பின் தங்கியிருந்தன; ஆந்திரத்தையும் கேரளத்தையும்விட வடக்கேயுள்ள சௌராஷ்டிரமும், ராஜஸ்தானும், அசாமும் பின்தங்கியிருந்தன. ஆகவே இந்நிலையில், பின் தங்கியிருக்கும் பகுதியை முன்னேறியுள்ள பிறப் பகுதிகளின் வளர்ச்சிக்கும் ஈடாக கைதூக்கிவிட வேண்டும். இது முதல் அடிப்படை! இரண்டாவது அடிப்படை; இந்தியாவிலுள்ள சகல பகுதிகளும், ராஜ்யங்களுமே சமமாக வளர்ச்சியடைய வேண்டும்!

பம்பாயை விடத் தமிழகம் பின் தங்கியிருக்கிறதாம்; தமிழ

★ தொடர்ச்சி 7-ம் பக்கம்

சென்னை 8-2-57 வெள்ளி

விடமாட்டோம்!

காட்டுக் குதிரையைக் கடிவாளம் இட்டு அடக்கி விடலாம்!

மதயானையை அங்குசம் கொண்டு அடிமை கொள்ளலாம்!

சிங்கமும் புலியும் கூண்டிலே கிடந்தால் வேடிக்கை காட்டுகிற அளவுக்கு வணங்கிப் பணிந்து விடலாம்!

ஆனால் விடுதலை உணர்ச்சி அப்படியல்ல; அது ஒரு விசித்திரமான தீ! புதுமையான நெருப்பு! அணைக்க முயன்றால் வானோங்கிப் பரவி சுடர் விட்டுப் பிரகாசிக்கும் தன்மை கொண்டது!

—இதை நன்றாக உணர்ந்து கொண்டிருக்கும் 'உலகச் சரித்திரம்' தீட்டிய பண்டிதர்தான் சென்ற வாரம் சென்னைப் பொதுக் கூட்டத்திலே தென்னகத்தின் மாபெரும் விடுதலை இயக்கமாம் திராவிட முன்னேற்றக் கழகத்தின்மீது தொடர்ந்து பல நிமிஷங்கள் ஏசல் கணைகளை பூட்டியிருக்கிறார்!

காமராசர் அடியெடுத்துக் கொடுக்க; ஓமகுண்டத்தின் முன்னே மந்திரம் ஜெபிக்கும் குருக்களைப் போல தேர்தல் சடங்குக்காக வேண்டி வழக்கம்போல் வசைமாரி பொழிந்திருக்கிறார்!

"ஒன்று மட்டும் முக்காலும் நிச்சயம்தான். வானமே இடிந்து விழுந்தாலும், இந்தியாவின் எந்த ஒரு பாகத்தையும் பிரிந்து செல்ல அனுமதிக்க மாட்டோம்; இந்தியாவை எதுவும் பிரிக்க முடியாது!..."

—பண்டித நேரு நமது பிரிவினைக் குரலுக்குத் தந்திருக்கும் பதில் இது!

உச்சிமீது வான் இடிந்து விழுந்தாலும் திராவிடநாடு தரமாட்டாராம்! நாம் ஏதோ அவரது பாட்டன் வீட்டுப் பரம்பரைச் சொத்துக்கு பாத்தியதை கொண்டாட முயல்வதுபோல் நினைத்துக் கொண்டு பேசியிருக்கிறார், பஞ்சசீலப் பண்டிதர்!

இவர் மட்டுமல்ல; சரித்திரத் தெருவின் ஓரத்திலே சக்கைகளாகக் கிடக்கும் பல ஏகாதிபத்தியப் பித்தர்களும் இந்த மெட்டில்தான் விடுதலை கீதத்திற்கு வசைப்பாட்டு அமைத்திருக்கிறார்கள்!

இந்தியாவுக்குச் சுதந்தரமா? சூரியன் அஸ்தமிக்காத பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் அது நடக்க முடியாத விஷயம்—என்று சர்ச்சிலும்; இதர ஆதிபத்திய சீலர்களும் கூரையேறி நின்று கர்ஜனை செய்தார்கள், முன்பு!

பிறகு என்ன நடந்தது? இந்தியா இன்று அடிமை நாடாகவா இருக்கிறது?

'பாகிஸ்தானா? அது வெறும் பகற் கனவு'—பண்டிதரே பலமுறை புயல் நடையிலே பேசியிருக்கிறார், இப்படி!

ஆனால் இன்று தேசப் படத்திலே அந்தப் பகற் கனவு பலிதமானதைப் பார்க்கிறோமே நாம், இரண்டு கண்களாலும்!

இங்கிலாந்தே அழிவதானாலும் அயர்லாந்திற்குச் சுதந்தரம் தரமாட்டோம்—என்று சங்கெடுத்து ஊதினார்கள்!

இன்று இங்கிலாந்து அழிந்துவிடவில்லை; ஆனால் அயர் பூமி ஆதிபத்தியக்காரர்களின் வெறியகற்றிப் வெற்றிப் பாதையிலே பீடு நடை போட்டுத்தானே வருகிறது!

பண்டித நேரு உலக அரங்கில் பெரிய மனிதரெனப் பெயர் பெற்றிருக்கலாம். ஆனாலும் அவர் சர்ச்சிலைவிட முற்றிப்போன ஏகாதிபத்திய கர்த்தரல்லவே!

அவரே தோற்றுப்போய்; இந்தியாவின் விடுதலையைக் கண்டு, வெட்கித் தலை குனிந்து கொண்டிருக்கும்போது இந்தப் பண்டிதரின் முடிவு எம்மாத்திரம்?

—இப்படித்தான் கேட்கத் தோன்றுகிறது; செப்படி வித்தைக் காரனைப்போல பொது மக்களை மயக்கி ஓட்டுப் பெற வந்திருக்கும் பண்டிதரின் ஆவேசத் தாக்குதலைக் கேட்கும்போது!

தென்னகம் தேம்பி அழும் நேரம் ஆனந்த பவனத்திலே உலவிக் கொண்டிருந்தவர் இப்போதுகூட ஆறுதல் சொல்லிடவில்லை!

ஐந்தாண்டுத் திட்டத்திலே அநீதி இழைக்கப்பட்டு விட்டதாகக் கூறிக் கிளர்ச்சி செய்கிறீர்களே! வேண்டாம் அது! விரைவிலே உங்களுக்கும் சமபங்கு கிடைத்திட வழி செய்கிறேன் என்று நேர்மை வழியில்கூட அவர் சொல்லவில்லை!

பிரிவினைப் பற்றிப் பாய்ந்து விழுவதாலேயே திராவிட முன்னேற்றக் கழகம் தேய்ந்து விடுமென்று கனவு கண்டிருக்கிறார்!

மேலும் அவர் கூறினாராம்-'திராவிடக் கட்சிகள் அநாகரிகமான காட்டு மிராண்டிக் காலத்துக்குப் பின்னோக்கிச் செல்கின்றன!"—என்று.

—காட்டுமிராண்டிக் காலத்துக்குச் செல்ல நினைக்கிறதாம் தி. மு. கழகம்!

உண்மைதான், பண்டிதரே! நீங்கள் கூறியது அனைத்தும் நூற்றுக்கு நூறு உண்மைதான்!

திராவிட முன்னேற்றக் கழகம் காட்டுமிராண்டிக் காலத்திற்குத்தான் செல்ல நினைக்கிறது!

பண்டிதர் குறிப்பிடுகிற அந்தக் காலத்திலே உலக மக்கள் மரவுரி தரித்து, மரக்கிளைகளிலும், குகைகளிலும் வாழ்ந்து வந்தார்கள்!

ஆனால் தென்னகத்தின் ஆதிக்குடியாம் திராவிடத் திருமகன் அப்போதும் நாகரிகத்தின் நாயகமாய் வாழ்ந்து வந்தான்!

நிர்வாணக் கோலத்திலே நாநிலத்தோர் திரிந்த காலை "நோக்கு நுழைக்கல்லா நுண்மைய பூக்கனிந்து, அரவுரியன்ன அறுவை நல்கி" அகிலமெல்லாம் புகழ ஆண்டிருக்கிறான்!

மற்ற மண்டிலத்தோர் மாதாவுக்கும் மனைவிக்கும் வேறுபாடு தெரியாமல் வாழ்வு நடத்தி வந்த நேரத்திலே தமிழன் உயர் பண்பாட்டின் சிகரமாய் வாழ்ந்து வந்தான்!

காசினி வாழ்வோர் கடல்கண்டு அஞ்சி நடுங்கிய காலை தென்னவன் கலம் கண்டு, கடல் கடந்து, நிலம் வென்று வளம் கொண்டு வாழ்ந்தான்!

பண்டிதரே; பண்டிதரே! பாராண்ட இனம் கண்டு உம்மினத்தவர் பராமுகமாய் இருக்கும்போது, நாங்கள்—இந்த மண்ணுக்குரிய திராவிடப் பெருங்குடி மக்கள் மேலே குறிப்பிட்டிருக்கிற 'காட்டுமிராண்டிக் கால'த்திற்குச் செல்ல நினைப்பதில் தவறென்ன காணுகிறீர்?

தரித்திர நாராயணர்கள் ஆதிபத்தியக் கொடுங்கோலர்களை உருத் தெரியாமல் ஆக்குவதற்கு முன்; பழங்காலச் சரித்திரத்தை நினைவு கூறுவதில் குற்றமென்ன கண்டு விட்டீர்?

அதனால்தான் அறிஞர் அண்ணா அவர்கள் காஞ்சிபுரம் பொதுக் கூட்டத்திலே குறிப்பிட்டார்கள்:

"வானமே இடிந்து விழுந்தாலும் திராவிட நாடு கிடையாது என்று பேசினாராம் நேரு பண்டிதர்!

நான் கூற விரும்புகிறேன்—வானமே இடிந்து விழுவதானாலும் நாங்கள் திராவிடநாடு பெறாமல் விடவே மாட்டோம்!"

—இதையேதான் நமது பிரிவினை எதிரிகளுக்கு மீண்டும் வலியுறுத்த ஆசைப்படுகிறோம்!

ஏன் வந்தார்?

தமிழகத்தில் புயல் வீசியபோது வராதவர்; அரியலூர் விபத்தின்போது நாம் அழுதுகொண்டிருக்கும்நேரம் வராதவர் இப்போது மட்டும் ஏன் வந்தார்? "ஆனந்த விகடன்' தீட்டியிருக்கும் இந்தச் சித்திரம் தக்க பதில் கூறுவதைக் கவனியுங்கள்!



அன்புள்ள பொன்முடி,

"....... காரைக்குடி தொகுதிக்கு திரு. மு. அ. முத்தையா. செட்டியார் அவர்களுக்கு கதர் ஆடை அணிவித்துக் காங்கிரஸ் அபேட்சகராக சென்னை காங்கிரஸ் தலைமைப்பீடம் நிறுத்தி வைத்திருக்கிறது. இவருக்கும் காங்கிரசுக்கும் என்ன சம்பந்தம்? இவரை நிறுத்தி வைத்திருப்பதற்குக் காரணம் இவரிடம் பணம் இருக்கிறது என்பது தானே!

கோடிக் கணக்கான ஏழை மக்கள் கண்ணீர் சிந்தியும், தடியடி பட்டும், சிறைவாசம் செய்தும் எழுப்பிய காங்கிரஸ் ஸ்தாபனத்தில் இந்தக் கோடீஸ்வரனுக்கு என்ன ஜோலி? இதுதான் காங்கிரஸ் பிரகடனம் செய்துள்ள சோஷலிசத்தை வளர்க்கும் முறையா?"

—நாம் கூறுவதல்ல, பொன்முடி; 'கல்கி' கேட்டிருக்கிறது இப்படி!

முத்தையா செட்டியார் மட்டுமா காங்கிரஸின் பேரால் நிற்கிறார்?

குன்னியூர் சாம்பசிவ அய்யர் தஞ்சையிலே ஐயாயிரம் ஏக்கர் நிலம் வைத்திருக்கும் பெருந்தனக்காரர்.

அவருக்குக் காங்கிரஸ் டிக்கெட் கொடுத்து தேர்தலில் போட்டியிடும்படி வற்புறுத்தினார்கள். என்ன காரணமோ அவர் அதை மறுத்துவிட்டார்!

ராதாபுரத்திலே இன்னொருவர் நிற்கிறார். அவர்தான் ஏ. வி. தாமஸ்—மிகப் பெரிய தோட்ட முதலாளி!

முதலாளித்துவத்தின் மூலபலம் அனைத்தும் இன்று காங்கிரசின் சோஷலிசப் போர்வைக்குள்ளே வளர்ந்து கொண்டு வருகிறது!

பாவம்; ஏழைப் பாட்டாளியின் தோழனாய் விளங்கும் எருதுகளை அவர்கள் சின்னமாய் வைத்திருக்கிறார்கள். அன்புள்ள நண்பனே! எருதுகள் இனி ஏழையர் சின்னமல்ல; அது பெரு நிலக்கிழார்களும், குறுநில மன்னர்களும் தரும் போஷணையிலே வளரும் முதலாளித்துவத்தின் சின்னம் என்பதை இப்போது பொது மக்கள் புரிந்து கொள்ளத் துவங்கி விட்டார்கள்!

கோடீஸ்வரர்கள் இன்று காங்கிரஸ் கூடாரத்திலே இருப்பதற்கு சென்னை காங்கிரஸ் தலைமைப்பீடம்தான் காரணம் என்றும் 'கல்கி' ஏடு குறிப்பிடுகிறது!

உண்மை அதுவல்ல நண்பனே! சென்னையிலே இப்போதிருக்கும் தலைமைப் பீடம் மட்டுமல்ல; காங்கிரஸ் மூலவர்கள் அனைவரது கொள்கையுமே வட்டி வேந்தர்களுக்கும்; நிலப் பிரபுக்களுக்கும் கவசமிட்டுக் காத்து; ஏழைப் பொது மக்களைப் புழுவினும் கேவலமாய் நெளிய விடுவதாகத்தான் இருக்கிறது!

வெறும் வார்த்தை ஜாலமல்ல பொன்முடி, இது! அனைத்தும் உண்மை!

வேண்டுமானால் காங்கிரஸ் ஆட்சியின் கடந்த கால வரி விதிப்புக் கொள்கையை எடுத்துக் கொள்.

ஏழை நடுத்தர மக்களுக்கு நண்பனாக இருக்க நினைத்தால் இந்த ஆட்சி பீடம் என்ன செய்திருக்க வேண்டும்?

அவர்கள்மீது ஏறியுள்ள வரிச் சுமையைக் குறைத்திருக்க வேண்டும்!

அதிகவரி விதிக்காவிடில், அரசாங்கம் நடைபெறாதே— என்று நீ ஆயாசப்படலாம்!

உண்மைதான்! ஆனால் அந்த வரிச்சுமையைத் தாக்குவதற்குத்தான் இந்த நாட்டிலே ஏராளமான பெருந்தனக்காரர்கள் இருக்கிறார்களே, பொன்முடி!

தாங்க முடியாதவன் தலையிலேயுள்ள சுமைகளை எடுத்து தாங்க முடிந்த பயில்வான்கள் தலையிலே சுமைகளை ஏற்றுவது தானே உண்மை சோஷலிசத்திலே அக்கரை கொண்டவர்களது ஆட்சி முறையாக இருக்க முடியும்?

இதோ; கடந்த ஏழு ஆண்டுகளில் வரிச்சுமை எவ்வளவு உயர்ந்திருக்கிறது என்பதைப் பார்!

1948-ம் ஆண்டில் துணிகளின்மீது வரி 89 லட்சம் ரூபாயாக இருந்தது. ஆனால் 1956-லோ அது 29 கோடியே 50 லட்சமாக உயர்ந்திருக்கிறது.

1948—49-ல் விற்பனை வரி 32 கோடியே 40 லட்சமாக இருந்தது. இப்போதோ அது 70 கோடியே 69 லட்சமாகப் பெருகியிருக்கிறது!

1948-ல் மண்ணெண்ணெய்மீது போடப்பட்ட வரி 20 லட்சம் ரூபாய் தான்! தற்சமயமோ அது இரண்டரைக் கோடி ரூபாய்களாக அதிகரிக்கப்பட்டிருக்கிறது!

முன்னம் தீப்பெட்டி வரி ரூபாய் ஏழரைக் கோடியாக இருந்தது; இன்றோ அது 10 கோடியாக வளர்க்கப்பட்டிருக்கிறது!

அருமை நண்பா! ஜவுளித் துணி; மண்ணெண்ணெய்; தீப்பெட்டி—இவைகளை அதிகமாக உபயோகிப்பவர்கள் யார்? இவைகள்மீது வரி உயர்ந்தால் பாதிக்கப்படுபவர்கள் யார்?

ஏழை நடுத்தர வர்க்கத்தினர்தான்!

1950—51-லே மாநில அரசும், யதேச்சாதிகார டெல்லி அரசும் சேர்ந்து விதித்த மொத்த வரிகளின் மதிப்பு 635 கோடி ரூபாய்!

1955—56-லே இந்த வரித்தொகை 750 கோடியாக உயர்த்தப்பட்டது!

—உயர்ந்த வரிகள் இந்த அளவிலாவது இருக்கக் கூடாதா?

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திற்குள் இந்த வரித்தொகை 850 கோடி ரூபாயாக உயர்த்தப்படவும் உத்தேசம் இருக்கிறதாம்!

அன்பு நண்பா! விலைகள் உயர்கின்றன விஷம் போல! அதோடு போட்டியிட்டுக் கொண்டு வரிகளும் உயர்ந்தால் ஏழை மாந்தர் என்னதான் செய்வார்கள்?

உழைக்கும் தோழர்களின் முதுகிலே இவ்விதம் கொள்ளிக் கட்டையினால் வரிபோடும் காங்கிரசாட்சி; இதே ரீதியிலே பணக்காரர்கள் மீதும் வரி விதித்திருக்கிறதா?

அந்தப் பண முதலைகளிடமிருந்து அரசாங்கத்திற்குச் சேர வேண்டிய பொருளைப் பிடுங்கிக் கொள்வதில் கெடுபிடியையும், கண்காணிப்பையும் அதிகமாக்கிக் கொண்டிருக்கிறதா?

இரண்டுமில்லை நண்பனே, இரண்டுமில்லை! தனவந்தர் தலையிலே அதிக வரிச்சுமைகள் சுமத்தப்படவுமில்லை; அவர்கள் தர வேண்டிய குறைந்த வரிகளையும் சரியான முறையிலே வசூல் செய்யவும் இல்லை!

இதோ பார் இந்தப் புள்ளி விபரங்களை:

1953–54ம் ஆண்டில் மட்டும் பெருந்தனக்காரர்களிடம் வசூல் செய்யப்படாமல் பாக்கியிருக்கும் வருமான வரித் தொகை எவ்வளவு தெரியுமா? 169 கோடியே 6 லட்சம் ரூபாய்கள்!

அது மட்டுமா?

சில ஆண்டு காலமாக இந்த நாட்டுப் பண முதலைகள் வரி கொடுக்காமல் அரசாங்கத்தை ஏமாற்றிய தொகை எவ்வளவு தெரியுமா?

300 கோடி ரூபாய்கள்;

300 கோடி ரூபாய்கள்!

பணக்காரர்களிடமும் ஆலை அரசுகளிடமும் வரித் தொகையையே விட்டுக் கொடுக்கிறது காங்கிரஸ் அரசாங்கம்!

ஆனால் ஏழை நடுத்தர வர்க்கத்தினரிடமோ அது அடித்தும், மிரட்டியும், அச்சுறுத்தியும் வசூலித்துக் கொள்கிறது!

வரி கொடுக்க முடியாத ஏழை, உடம்பில் வலியெடுக்கும்வரை அடி உதைகள் பெறுகிறான்! வீடு வாசல், மாடு மனை முதலியவற்றை விற்றுவிட்டு ஓட்டாண்டியாக நடுத்தெருவில் நிறுத்தப்படுகிறான்!

ஆனால் இந்த 'சோஷலிச சர்க்காரிலோ' முன்னூறு கோடி ரூபாய்களை மறைத்துவைத்து மகா பெரிய மனிதர்களாக பண மூட்டைகள் கோலாகல வாழ்வு நடத்திக் கொண்டிருக்கிறார்கள்!

அருமைத் தோழா! இந்தக் கொடுங்கோன்மை — சோஷலிசம் என்னும் பெயரால் மக்களிடையே நடைபெற்று வரும் மோசடி — மாற்றியமைக்கப்பட வேண்டாமா?

அதனால்தான் தி. மு. கழகம் பொறுப்புணர்ந்து தனது கடமையை ஆற்றி வருகிறது.

அன்புள்ள பொது மக்களே! உங்களில் யாராவது மாட்டுப் பெட்டிக்கு ஓட்டளித்தால் அது ஏழைகளின்மீது இன்னும் வரிப் பளுவை அதிகமாக்கு — என்னும் புளித்துப் போன கொள்கைக்குக் கைலாகு கொடுத்ததாகத்தான் பொருள் கொள்ள முடியும்!

கைராட்டைக் கட்சியினரை நீங்கள் எவராவது கைதூக்கி விட்டால், பண முதலைகளும், ஆலை அரசுகளும் தங்கள் வரிப் பணத்தை மறைத்துப் பெரு வாழ்வு வாழ்வதற்கு முழு ஆதரவு அளித்ததாகத்தான் அர்த்தம் செய்ய முடியும்!

அருமை நண்பா! இந்த எங்களது முழக்கத்திற்கு நாட்டிலே நல்ல ஆதரவு அரும்பி வருகிறது என்பதையும் உனக்கு இங்கே மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்!

இங்ஙனம்,

உன் அன்புத் தோழன்.

நாடகத்தில் உரையாடல்!

[5-1-57-ந்தேதியன்று டாக்டர் மு. வரதராசனார் அவர்கள் தலைமையில், சென்னை கவின் கலைக் கழகத்தார் நடத்திய விவாத அரங்கில் ஆசிரியர் மு. க. அவர்கள் ஆற்றிய சொற்பொழிவு இங்கே தரப்படுகிறது.]

மு. கருணாநிதி

அன்புள்ள தலைவர் அவர்களே! பேரறிஞர்களே! பெருமக்களே! தாய்மார்களே! இந்தியக் கவின் கலைக் கழக ஆதரவில் தென்னிந்திய நடிகர் சங்கத்தார் இப்படியொரு விவாத மன்றத்தை நல்ல பெரும் விழாப் போல அமைத்துள்ளது கண்டு மகிழ்ச்சியுறுகிறேன். தக்கவர் ஒருவர் தலைமையிலே விவாதம் நடைபெறுவது முற்றிலும் பொருத்தமே! 'உரையாடல்' என்னும் தலைப்பிலே நான் என் கருத்துக்களைச் சொல்ல வேண்டும். 'நாடகத்தில் கதையமைப்பு' என்பது பற்றி எனக்கு முன்பு திரு. வி. சி. கோபாலரத்தினம் அவர்கள் உரையாற்றினார். அதனை ஒட்டியும் வெட்டியும் பலர் பேசியிருக்கிறார்கள். கோபாலரத்தினம் அவர்களுக்கும் எனக்கும் நிறைய தொடர்பு உண்டு... அதாவது கதை அமைப்பு என்ற தலைப்புக்கும் உரையாடல் என்ற தலைப்புக்கும்! நீங்கள் நினைப்பதுபோல எனக்கும் அவருக்குமுள்ள தொடர்பு தணிக்கைத் (சென்சார்) தொடர்புதான்.

கதை அமைப்பு என்பது உடலானால் உரையாடல் அதன் உயிரோட்டமாகும். உடலுக்கு அலங்கார ஆடைகள் உடுத்திக் கொள்வது போலவே நாடகத்தில் காட்சி, திரை முதலிய ஏனைய அமைப்புகள். உரையாடல் அற்ற ஊமை நாடகங்கள் ஒரு காலத்தில் தமிழகத்தில் புகழ் பெற்றிருந்தன. ஆனால் அந்த நாடகங்களில் நடித்தவர்கள் தோல் பொம்மைகளும், தாள் பதுமைகளுமே! தோல் பொம்மை நாடகம், பொம்மலாட்டம் போன்ற நிகழ்ச்சிகளிலே கூடக் கதையை மக்களுக்குப் புரிய வைக்கத் தனியாக ஒருவன் நின்று கொண்டு விளக்கம் கூறிக் கொண்டு இருப்பான். அந்த முறையின் வளர்ச்சியை பேசாத படங்கள் வெளி வந்த போது நாம் கண்டிருக்கிறோம். பெரும்பாலும் பாடல்களாலேயே நாடகங்கள் நடைபெற்ற காலமும் இருந்தது. கிரேக்கம் போன்ற நாடுகளிலும், மற்றும் கலை வளர்த்த தேயங்களிலும். அதே சமயம் தமிழகத்திலும் பாட்டு நாடகங்கள் தலை சிறந்து விளங்கின.

"வள்ளிமானே ஒரு புள்ளி மான் வந்ததுண்டோ?" என வேலன் கேட்டு, அதோடு விடாமல் 'மேயாத மான் புள்ளி மேயாத மான்' என்று அதன் சிறப்பையும் சொல்லி, பின்னர் வேலன் விருத்தனானதும் 'தேனும் தினை மாவுமிருக்கு; தின்று பசியாருமே கிழவா!' என வள்ளி பாடி, இப்படி ஒரே பாட்டு மயமாக இருக்கும் வள்ளித் திருமண நாடகம்.

'சிதம்பரம் போகாமலிருப்பேனோ—ஜென்மத்தை வீணாய்க் கழிப்பேனோ' இப்படி நந்தன் பாட, வேதியர் வெகுண்டு... 'மாடு தின்னும் புலையா! உனக்கு மார்கழித் திருநாளா?' எனப் பாட...ஓரே பாட்டாகவே முடியும் நந்தன் சரித்திரம்!

இதற்கு அடுத்த கட்டமாக நாடகத்தின் கதையைத் தூக்கிச் செல்ல செய்யுட்களே வெகுவாக பயன்பட்டன. செய்யுள் மூலமாகவே கதை நிகழ்ச்சிகளை நகர்த்திக் கொண்டு போனார்கள். அந்த முறையினால் நடிகர்களுக்கும் மனப்பாடம் ஆகிற அளவுக்கு அந்த செய்யுட்கள் மனதிலே படிந்து விடக்கூடும். ஷேக்ஸ்பியருடைய நாடகங்கள் பெரும்பாலும் கவிதை வரிகளையே வசனங்களாகக் கொண்டிருந்தன. இதை யொட்டித்தான் போலும் பேராசிரியர் சுந்தரம் பிள்ளை மனோன்மணியம் நாடகத்தை அவ்வாறே அமைத்தார்.

இதற்குப் பின்னர் தமிழகத்து நாடக அரங்கில் ஏற்பட்ட மாற்றம் நாடகக் கலையையே அழித்துவிடக்கூடுமோ என்ற அச்சத்தைப் பலருக்கு அளித்தது. நாடகத்திற்கான நடிகர்கள் தங்களுக்குத் தரப்பட்ட பாத்திரங்களை உணராமலே மனம் போன போக்கில் கால முரண்பாடுகளையும் கவனியாமல் உரையாடல்களைப் பயன்படுத்தத் துவங்கினார்கள். திருச்சியிலே 'சம்பூர்ண கோவலன்' நாடகமொன்று—தஞ்சையிலிருக்கிற நடிகருக்கும், சென்னையிலிருக்கிற நடிகருக்கும், கோவையில் இருக்கிற நடிகருக்கும் தந்தி பறக்கும். அனைவரும் குறிப்பிட்ட நாடக தினத்தன்று திருச்சியில் கூடி நடிப்பர். அவரவர்கள் பாத்திரங்களுக்குரிய வசனங்களை அவர்களே பேசிக் கொள்வர். அதில் நடிகர்களுக்குள்ள தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்கள் எல்லாம் மேடையிலேயே குத்திக் காட்டப்படும்.

இதன் அடுத்த கட்டமாகத்தான் நாடகத்திலே 'உரையாடலில் மறுமலர்ச்சியும்...புதிய திருப்பமும் ஏற்பட்டது எனலாம்.

உரையாடல்களுக்கு நாடகத்தில் தனிச் சிறப்பு வழங்கப்பட்டது. கதையை நகர்த்திச் செல்லக்கூடிய உரையாடல்கள் மக்கள் உள்ளத்திலே நன்கு பதியுமளவுக்குத் தேவை என்ற நிலை பிறந்தது. உரையாடல்களிலே உணர்ச்சியோட்டத்தை மக்கள் வரவேற்கத் தொடங்கினர். தேவையான கருத்துக்களை உரையாடல் வாயிலாகப் பெற்று மகிழ்ந்தனர்.

அந்த உரையாடல் பற்றிப் பல்வேறு அபிப்பிராயங்கள் தமிழகத்தில் உலவுவதை நான் அறியாமலில்லை. உரையாடல்களில் அலங்கார — அடுக்குச் சொற்கள் அவசியந்தானா என ஒரு சாரார் கேட்கின்றனர். "அடுக்குச் சொல் அவசியமா?" எனக் கேட்கும்போதே இரண்டு 'ஆ'னுக்கள் வருவதை அவர்கள் மறந்து விடுகின்றனர். இதுபோல அர்த்தமுள்ள அடுக்குச் சொற்களோ, அலங்காரச் சொற்களோ கையாளப்படுவதை நான் வரவேற்கிறேன். ஒரு நாடகம் பார்த்தேன்; அதில் வரும் கதாநாயகன் "சர்ப்பத்தையும் சாம்பார் வைத்துச் சாப்பிட்டு விடுவேன்" என்றான். அது போன்ற அடுக்குச் சொற்கள் நிச்சயமாகத் தேவையில்லை.

சரித்திர நாடகங்களிலோ, திரைப் படங்களிலோ அலங்கார உரை நடை இன்றியமையாததுதான்! பாவலனைப் போலவே நாட்டுக் காவலனும்; அந்தக் காவலனின் அரண்மனைக் காவலனும் பேசுவது சரியா என்கின்றனர். சரியே என்கிறேன் நான்.

மன்னவனிடம் காவலாளி ஓடி வந்து "மன்னவா...மாற்றார் நமது மலையரண் தாண்டி வந்து விட்டனர்!" என்கிற போதுதான் அரசனும் வெகுண்டு.

"என்ன? மாற்றான் அரண் தாண்டினரா?...எடு வாளை!" என வீரமுடன் புறப்படுவான். அந்தக்காட்சி நமக்கு உணர்ச்சியூட்டுவதாகவும் அமைய முடியும்.

அதை விட்டுக் காவலன் வந்து...

"ராஜா ராஜா! தெரியுங்களா சேதி!...நம்ப அரண்மனையை நோக்கி எதிரிங்க வாராங்க!" என்றால், உடனே அரசன் "அப்படியா?...போய் மந்திரியைக் கூப்பிட்டுவா!" என்பான் தளர்ந்த மொழியிலே!...... நாடகத்திற்குத் தேவையான வீர உணர்ச்சி குன்றும் சமூக நாடகங்களில் அடுக்கு, அலங்கார மொழிகள் தேவைதானா எனவும் கேட்கப்படுகிறது. சமூக நாடகத்தில் முழுமையும் அடுக்கு அழகு மொழி தேவையில்லை. சில நாடகங்களில் அழகு மொழி தேவைப்படத்தான் செய்கிறது. உரையாடலில் வழக்குச் சொற்களே அமைக்கப்பட்டு வழக்கு நடையே தேவை யென்பவர்கள் இலக்கண நடை, அலங்கார நடையை ஒத்துக் கொள்வது கிடையாது, பெரும்பாலும்!

ஆனால், அலங்கார நடை வேண்டுமென்பவர்களோ, வழக்கு நடையை வெறுப்பது கிடையாது. வரவேற்கிறோம். வாழ்க்கையில் உள்ள வழக்கு நடையே நாடகத்தில் கையாளப்பட வேண்டுமென்றால் அவர்களுக்கு நான் தரும் பதில்; வாழ்க்கையிலும் மனிதன் அலங்கார இலக்கண நடை பேசுகிறான் என்பதேயாம்!

வேலைக்காரனைப் பார்த்து, "பேப்பரை எடுத்துக்கிட்டு வா!" என்கிறோம்.

இரவு பள்ளியறையிலே மனைவியிடம்......"கண்ணே! இன்பமே!" என்று "கலவி நடுப் பாதையிலே காதல் பேசு"கிறோம்; பாரதியார் கூறியவாறு! நீங்கள் எப்படியோ தெரியாது; நான் அப்படித்தான்!

இன்னுமொரு உதாரணம் கூற விரும்புகிறேன்......இசையுலக ஜோதி ராஜரத்தினம் மறைந்தபோது அவர் வீட்டிற்குச் சென்றிருந்தேன். அவரது துணைவியார் அவர் சடலத்தின் பக்கம் அமர்ந்து அழுதுகொண்டிருந்தார்கள். வழக்கு நடையிலே அவர்கள் அழுதிருந்தால் அதை நான் இப்போது திருப்பிச் சொல்லும்போது கண் கலங்க மாட்டேன்; நீங்களும் கலங்கிட மாட்டீர்கள். என்ன சொல்லி அழுதார்கள் தெரியுமா? புலம்பலோ ஒப்பாரியோ அல்ல!...

"ஏ, சக்கரவர்த்தி! சபையிலே கரகோஷம் செய்யும்

★ தொடர்ச்சி 8-ம் பக்கம்

காதலுக்குக் கண்ணில்லை

தொடர் நாடகம்

★ தில்லை வில்லாளன் எம். ஏ., ★

[காட்சி--27 தொடர்ச்சி]

நீதிபதி: இந்நாட்டு சட்டத்திற்கு விரோதமாக தாங்கள் பேசாதீர்கள்.

ராணி: என் போக்கைத் தடுத்து நிறுத்த எதற்கும் சக்தியில்லை.

(ராணி எழுந்திருக்கிருள்.)

நீ: நீதிபாலர் இருக்கின்றனரா? எழுந்து நில்லுங்கள். உங்கள் கடமையைச் செய்யுங்கள்.

(அவர்கள் அவையின் நாற்புற கதவுகளை அடைத்துவிட்டு வந்து கூறுகின்றனர்.)

நீ. பா: சட்டத்திற்கு விரோதமாக இந்த அவையினுள் யாரும் வரவும் விடமாட்டோம் — அதுபோலவே வெளியில் செல்லவும் அனுமதிக்க மாட்டோம்.

ரா: ஐயோ, நல்ல சட்டம்—நீதி—நான் இந்தக் கொடியவனின் பேச்சைக் கேட்கிறேன்—கேட்கிறேன்.

(மீண்டும் அரியாசனத்தில் அமர்கிருள் ராணி.)

பழி: (ஆளவந்தானிடம்) உன் எதிரி அவள் — உன் எதிரில் இருக்கிருள். மறந்து விடாதே!

நீ: கொடுக்கப்பட்டுள்ள ஐந்து மணித் துளிகளில் உன் பேச்சை முடித்துக் கொள்—குற்றவாளி பேசும் பொழுது குறுக்கில் எவரும் பேசக் கூடாது. அமைதி! அமைதி! அமைதி!

ஆள: நீதிதேவரே! நீதி நிலை நாட்டக் கூடியுள்ள இப்பேரவை பெருமக்களே! என் கதையை எங்கிருந்து தொடங்குவது என்பதே தெரியவில்லை! ஆனாலும், என் பிறப்பிலிருந்து சொல்கிறேன். என்னை யாரென்று முதலில் உங்களுக்குக் கூறுகிறேன். நான்தான் துரோகத்தால் துலைக்கப்பட்ட அறநாட்டு மன்னன் வெள்ளைமனத்தான் மகன்—ஒரு துன்மார்க்கன் என் தந்தையின் உடனிருந்தே பழிவாங்கினன்.

(எல்லோரும் ஆச்சரியமாகப் பார்க்கின்றனர்.)

ரா: மன்னன் மகன்!

நீ: மாண்டுபோன மன்னனின் பெருமைக்கு இழுக்கு வரும் வகையில் ஏதும் கூறக் கூடாது.

ஆள: அதற்குப் பதிலாக, என் பழி தீர்த்துக் கொள்ளவே, இம்மன்னர் மாளிகையில் நுழைந்தேன் — மெய்காப்பாளனுகை அமர்ந்தேன். மன்னருக்கு உயிருக்குயிரானவனுகப் பழகினேன். ஒன்ருக உண்டேன்—ஒன்ருக வாழ்ந்தேன்—மன்னன் தனது மனதிலே மறைந்து கிடக்கும் இரகசியங்களை என்னிடம் கூறிடும் அளவு நெருக்கம் ஏற்படட்டும் என்று காத்திருந்தேன்.

நீ: மூன்று மணித் துளிகள் முடிந்துவிட்டன.

ஆள: சுருக்கமாகக் கூறிவிடுகிறேன். கொலை நடந்த இரவு பன்னிரண்டு மணி—கயிறு கொண்டு மன்னரின் அந்தப்புர உப்பரிகையிலேறி உள்ளே நுழைந்தேன். மெல்ல நடந்து, அவர் படுத்திருந்த அறைக்கே சென்றேன். ஓசையின்றி கதவைத் திறந்து தங்கக் கட்டிலருகே போனேன். வலைத் துணியை நீக்கினேன் — நிலவொளி படர்ந்தது—இரவுகூட பகல் போல் ஒளி வீசியது—என் தந்தையைக் கொன்ற பாதகனைக் கண்டேன்—என் மனம் படபடத்தது. என் கரம் துடிதுடித்தது. பக்கத்தில் கிடந்த வாளை எடுத்துக் குத்தினேன்—அந்தக் கொடியவன் உயிர் துறந்தான் — கடைசியில் அந்த வாள் ராணியினுடையதாக இருந்தது — ஆகவே அதை எடுத்து உடனேயே ஒளித்து விட்டேன்.

ரா: ஆ!

ஆள: மன்னனை நானேதான் கொன்றேன்! தண்டனை ஏற்கத் தயாராக நிற்கிறேன்.

நீ: மன்னனைக் கொன்ற குற்றத்திற்காக உனக்கு கொலை தண்டனை விதித்திருக்கிறேன்—நீயும் மன்னர் குல மனதால் மூன்று தினங்கள் உன்னை அடைத்து வைக்கும் சிறையில் ஒரு கோப்பையில் நஞ்சிருக்கும்–அதனை நீயாகக் குடித்து உயிர் விடலாம்—அல்லது மூன்ருவது நாளும் உயிருடனிருந்தால் தூக்கிவிடப்படுவாய்.

(அவை கலைகிறது. ராணி மூர்ச்சையாகி. சிம்மாசனத்திலிருந்து விழுகிருள்.)

காட்சி--28

(ராணி பொன்மேனியாள் தனிமையில் அழுகிருள். அப்போது குயில், குரலாள் ஓடிவருகிருள்.)

கு. கு: அண்ணி, என்னை மன்னித்து விடவும் — அண்ணனைக் கொன்றதும் நான்தான்—நிரபராதியான ஆளவந்தானைக் கொல்லப் போவதும் நான்தான்.

ரா. பொ: (ஆச்சரியமாக) மன்னரைக் கொன்றது நீயா?

கு. கு: எல்லாம் காதல் மயக்கம் தந்தபோதையில் நடந்துவிட்டது அண்ணி. என்னை மன்னித்துவிடு. காதல் இம்மாதிரி கண்மூடிக் காரியங்களை செய்யச் சொல்லும் என்பது எனக்குத் தெரியாமல் போய்விட்டது. காதலுக்குக் கண்ணில்லை யென்பார்கள் — அது சரியாகப் போய்விட்டது.

பொ: என்னம்மா கூறுகிருய்—காதல் பற்றிய விளக்கம் எனக்கா சொல்கிருய்!

கு. கு: அண்ணி, என்னை மன்னித்து விடுங்கள். நான் ஏழைகள் வாழ்விலே நெளியும் துயர் துடைப்பதே என் வாழ்வின் இலட்சியமாகக் கொண்டேன். ஆனால், அந்த இலட்சியத்திலேயே. வேறொரு துணை கிடைத்தது. ஆம், அவர் பெயர் சிரிப்பரசன் என்ருர். என்னோடு சேர்ந்து தொண்டாற்றினர். சிரித்துப் பேசினர். வேடிக்கையையே வலையாக்கி என்னை வீழ்த்திவிட்டார்.

பொ: கொலைக்கும். நீ வீழ்ந்த வலைக்கும் என்னம்மா சம்பந்தம்?

கு. கு: அவர், அரச முத்திரை பொறித்த அனுமதி மோதிரம் அவசியம் வேண்டுமென்ருர். அரண்மனையில் எந்த நேரத்திலும் நான் செல்ல அனுமதி வேண்டுமென்ருர்-'ஏன்?' என்றேன் நல்லதற்குத்தான் என்ருர்–சரி யென்றேன். தந்துவிட்டேன். அந்தக் காதலன்தான் என் அண்ணன் உயிர் குடித்திருக்க வேண்டும் — இல்லாவிட்டால், ஆளிருந்து, வாள் இல்லாமல் போவானேன்? அந்தக் கொலைகாரன் தப்பிவிட்டான்!

பொ: குயிலே, நீ குழந்தை—கொலை வழக்குகள் பற்றி உனக்குப் புரியாது. காதலைக் குறைகூருதே — காதலில் நீயாவது வெற்றி பெறு—சிரிப்பாசரைத் தேடு — உங்களுக்குத் திருமணம் செய்து தருகிறேன்.

கு. கு: குற்றவாளியொருவர்—தண்டனை பெற்றவர் ஒருவர்—நிச்சயமாக நான் அப்படித்தான் நினைக்கிறேன்.

பொ: குயில், நீ போ—காதலர் வரவிற்காக ஏற்பாடு செய்-நிச்சயமாக, குற்றவாளிதான் தண்டனை அனுபவிக்கப் போவது—அது பற்றி சந்தேகப்படாதே.

காட்சி--29

(பதுங்கு மலையில் பழிதீர்த்தான் துயரம் தோய்ந்த முகத்தோடு உட்கார்ந்திருக்கிருன். அப்போது, மிக அவசரமாக, நீலவானத்தானும். நகை முகத்தானும் உள்ளே வருகின்றனர்.)

ப: என்னை மன்னித்து விடுங்கள்—ஆளவந்தானைக் காப்பாற்ற என்னுல் முடியவில்லை.

ந. மு: காப்பாற்ற முடியும். கவலையை விடுங்கள். இதோ, மன்னனைக் கொன்ற வாள். (வாளைக் காட்டுகிருன்.)

ப: கொன்ற வாள் உன்னிடம் எப்படிக் கிடைத்தது தம்பி?

ந. மு: நான் எடுத்து வந்தேன்.

ப: எங்கிருந்து? எப்படி?

ந. மு: கொலையுண்ட மன்னன் மார்பிலிருந்து—மறைந்திருந்து.

ப: அப்படியானுல் மன்னனைக் கொன்றது யார்?

ந. மு: மகாராணி!

ப: என்ன? மகாராணியா? பொன்மேனியாளா? நான் சந்தேகித்தேன். அவனே, சாகப்போகும் நேரத்தில் கூட, அவன்மீது கொண்ட காதலால், தானே கொன்றதாகக் கூறிவிட்டான்!

ந. மு: உம், புறப்படுங்கள்—நீதிதேவரை சந்திப்போம்.

நீல: ஆம், வளர்க்க குழந்தை கொடுத்தீர்கள் — ஆனால், என் அன்பிற்கு அவனே பாத்திரனுகி விட்டான். அவன் பிரிவை என்னுல் தாங்கவே முடியாது.

ப: தம்பி, உனக்கு இந்த வாள் கிடைத்த விதம்?

ந. மு: வாள் கிடைத்த கதைதானே, விபரமாகக் கூறுகிறேன் — கேளுங்கள். என்னை, உங்கள் கருத்துப்படி ஆளவந்தான் விரட்டியடித்தான். ஆனுல் நான் அறவாழியை விட்டுப் போகவில்லை. மாறு வேடத்தில் சிரிப்பாசன் என்ற புனைப் பெயரில் ஆளவந்தானையும், உங்களைப் பற்றியும் ஆராய்ந்தேன். சிறு குறிப்புகள் போன்ற விபரங்கள்தான் கிடைத்தன—இந்நிலையில், இளவரசி குயில் குரலாள் நட்பு கிடைத்ததும் அவள் மூலம் முத்திரை மோதிரம் பெற்று, ஆளவந்தானின் நிழல்போல அவனறியாமலிருந்தேன். கொலை நடந்த அன்று, யாரோ, கருப்புடையில் ஒருவர் ஆளவந்தானோடு பேசிக் கொண்டிருந்தார்கள்.

— (தொடரும்) —

பின்னேறுகிறோம்! பின்னேறுகிறோம்!!

✱ 2-ம் பக்கத் தொடர்ச்சி

கத்தைவிட இந்தியாவின் இன்னும் சில பகுதிகள் பின் தங்கியிருக்கின்றனவாம்! எனவே அவ்வாறு பின் தங்கியிருக்கும் மாநிலங்களை யெல்லாம் உயர்த்தி; முன் தங்கியிருக்கும் மாநிலங்களோடு சரிநிகர் சமானமாக வைக்க வேண்டுமாம்!

—இதுதான் திட்டங்களின்படி முதலீடு செய்யப் படுவதற்குண்டான அடிப்படைகள் என்கிறது 'ஜனசக்தி' ஏடு!

அது எழுதுகிறபடியே வைத்து நிலைமைகளை ஆராய்வோம்.

பம்பாயை விடப் பின் தங்கியிருப்பது எது?

தமிழகம்(அல்லது சென்னை)

அப்படியானால் முன் தங்கியிருக்கும் பம்பாய்க்கு சென்னையைவிடக் குறைவாகத்தானே செலவிட வேண்டும்? அப்போதுதானே தமிழகத்தைக் 'கைதூக்கி' முன்னேயிருக்கும் பகுதிக்கு ஈடாக வைக்க முடியும்?

ஆனால் நடந்திருப்பது என்ன?

பம்பாய்க்கு ஒதுக்கப் பட்டிருக்கும் தொகை 129 கோடி ரூபாய்!

பின் தங்கியிருக்கும் சென்னைக்கு ஒதுக்கப் பட்டிருக்கும் தொகையோ 4 கோடியே 69 லட்சம்தான்!

இதிலிருந்து என்ன உண்மை புலப்படுகிறது?

'முன் தங்கி யிருக்கும்' வடக்கத்திய மாகாணங்கள் மேலும் மேலும் முன்னேறிக் கொண்டே போகின்றன.

'பின் தங்கி யிருக்கும்' தமிழகம் போன்ற தென்னகத்துப் பகுதிகள் மேலும் மேலும் பின் தங்கிக் கொண்டே போகின்றன!

இந்தியாவிலுள்ள சகல பகுதிகளுமே சமமாக வளர்ச்சியடைந்து கொண்டே போக வேண்டுமாம்—ஜனசக்தி கூறுகிறது இப்படி!

ஜனசக்தியாரே! ஜனசக்தியாரே! பட்டியலைப் பாருங்கள்! இதுவா சம வளர்ச்சிக்குள்ள அடையாளம்? இதுவா தென்னகம் வஞ்சிக்கப்படவில்லை என்பதைக் காட்டிடும் பட்டயம்?

—அல்ல ஜனசக்தியாரே; அல்ல! இந்திய வரலாறே கண்டிராத மாபெரும் மோசடி இது!

—இதை எதிர்த்துப் போராட முன்வர முடியவில்லை; ஆனால் ஏகடியம் செய்ய மட்டும் காங்கிரஸ்காரர்களைவிடப் போட்டி போட்டுக் கொண்டு முன்வந்து விட்டார்கள்!

அதுமட்டுமா! 'ஜனசக்தி' மேலும் எழுதுவதைப் படியுங்கள்:

"மொத்தப் பணம் 4800 கோடியில் ஏழே முக்கால் கோடி ஜனத்தொகை கொண்ட 'திராவிடத்திற்கு.' பெரும் பகுதியை—அதாவது 2 ஆயிரம் கோடி ரூபாயைக் கொட்டிக் கொடுத்துவிட வேண்டும் என்று கேட்கிறது, தி. மு. க. 30 கோடி மக்கள் கொண்ட இந்திய மாகாணங்கள் எக்கேடு கெட்டாலும் போகட்டும் என்கிறது."

அதாவது; தென்னாடு வடநாடு என்று இந்தியாவை இரு பகுதிகளாகப் பார்த்து மொத்தம் செலவாகும் நாலாயிரம் கோடியில் சரிபாதி பங்கு கேட்காதீர்கள்; ஜனத்தொகையின் அடிப்படையிலே பார்த்து தென்னாட்டில் ஏழே முக்கால் கோடி பேர்தான் வாழ்கிறார்கள்; வடநாட்டிலே முப்பது கோடி பேர் வாழ்கிறார்கள்; எனவே ஏழே முக்கால் கோடிப் பேருக்கு இப்போது ஒதுக்கியிருக்கும் சொற்பத் தொகை போதாதா?—என்று திருப்தி பெறுங்கள்—என்று உபதேசிக்க வந்திருக்கிறது 'ஜனசக்தி'!

அது மட்டும்தானா? சற்று முன்பு பின் தங்கியிருக்கும் பகுதிகளோடு சரிசமமாக வைப்பதற்கும்; சகல பகுதிகளும் சரிசமமாக வளர்ச்சியடைவதற்குமே திட்டத்தின் செலவுத் தொகை பகிர்ந்தளிக்கப்பட வேண்டுமென்று கூறியது.

இப்போது தலை குப்புறக் கவிழ்ந்து ஜனத் தொகையின் அடிப்படையில்தான் திட்டத் தொகை செலவு செய்யப்பட வேண்டு மென்கிற தோரணையிலே வாதாட வந்திருக்கிறது!

ஏதோ இந்திய உபகண்டத்திலுள்ள ஒவ்வொரு கோடி மக்களுக்கும் இவ்வளவு தொகை என்று ஒதுக்கப்பட்டிருப்பதுபோலவும்; அதன்படி இப்போது நமக்கெல்லாம் கிடைப்பது அந்த அடிப்படையில்தானென்றும் ஒரு தவறான எண்ணத்தையும் மக்கள் மன்றத்திலே துணிந்து சொல்வதற்கும் முன் வந்திருக்கிறது!

'ஜன சக்தி'யாரின் கூற்றுப் படியே பார்ப்போம்

பம்பாய் மாநிலத்தின் ஜனத்தொகை 2 கோடியே 8 லட்சம்.

மாநிலச் சீரமைப்புக்கு முன் உள்ள சென்னையின் ஜனத்தொகை 3 கோடியே 22 லட்சம்!

ஆக; பம்பாயைவிட சென்னை 1 கோடியே 14 லட்சம் மக்கட் தொகையை அதிகம் பெற்றிருக்கிறது!

'ஜனசக்தி'யார் சொல்லுகிறபடி, அதிகமாயுள்ள ஜனத் தொகைக்குத் தக்கபடி சென்னைக்கு பம்பாயைவிட அதிகமான தொகையல்லவா செலவிட வேண்டும்!

செலவிட்டிருக்கிறார்களா, இந்திய அரசாங்கத்தினர்?

இல்லையே!

பம்பாயைவிட சென்னையில் 1 கோடியே 14 லட்சம் பேர் அதிகம்!

ஆனால் 2-வது திட்டத்தின் செலவுத் தொகையில் ஜனத் தொகை அதிகமாக உடைய சென்னையைவிட 124 கோடி 31 லட்சம் அதிகம் ரூபாய்களை ஜனத்தொகை குறைவாயுள்ள பம்பாய் அடைகிறது.

இது எந்த அடிப்படையில்?

ஜனசக்தியார் எழுதியிருக்கிறபடி நாம் பம்பாயைவிடப் 'பின்தங்கியிருக்கிறோம்'!

பம்பாயைவிட அதிகமான மக்கட் தொகை பெற்றிருக்கிறோம்!

வளம் குறைவு; மக்கட் தொகையோ அதிகம்!

இந்த நிலையில் தமிழகத்திற்கல்லவா அதிகமான ரூபாய்களை முதலீடு செய்திருக்க வேண்டும்?

செய்ய வில்லையே அவர்கள்!

அதனால்தான் கேட்கிறோம்; நாலாம் நூற்றாண்டிலேயே கல்லணை போன்ற மாபெரும் அணைகளைக் கட்டி முடித்து, பொறி இயல் புலமை பெற்றிருந்த பைந்தமிழா! இன்று உன் பூமி வெறும் பாலைவனமாகத்தான் இருக்க வேண்டுமா? மானம் ஒன்றே நல்வாழ்வெனக் கொண்டு வாழ்ந்தவனே! இன்று உன் தாய் நிலம் வானம்பார்த்த சீமையாகத்தான் வாழ வேண்டுமா? அகிலும் தேக்கும், அழியாக் குன்றமும், முகிலும் செந்நெலும் முகிழ்த்திருந்த நாட்டில், பசியும் பஞ்சமும், நோயும் நொடியும் தான் வட்டமிட வேண்டுமா?

அன்புத் தோழனே; பதில் சொல்—என்று அறைகூவி அழைக்கிறோம்! ✱

தி. மு. க. தேர்தல் பிரச்சார

சிறப்பு மாநாடு

சென்னை எஸ். ஐ. ஏ. ஏ. திடலில்

10-2-57 ஞாயிறன்று

நடைபெறும்.

பொதுச் செயலாளர்

இரா. நெடுஞ்செழியன் அவர்கள்

தலைமை தாங்குவார்.

- ✱ நாட்டுக்கு நல்லாட்சி
- ✱ சர்வாதிகாரத்தின் எதிர்காலம்
- ✱ காங்கிரஸ் ஆட்சியின் ஊழல்கள்
- ✱ தி. மு. கழகமும் பொது மக்களும்
- ✱ தேர்தல் பிரச்சார முறைகளும் தன்மையும்

என்பதைப்பற்றி

அறிஞர் அண்ணா

என். வி. நடராசன்	ஈ. வெ. கி. சம்பத்
மு. கருணாநிதி	சி. பி. சிற்றரசு
கே. ஏ. மதியழகன்	சத்தியவாணி முத்து
க. அன்பழகன்	காஞ்சி கல்யாணசுந்தரம்
ஏ. வி. பி. ஆசைத்தம்பி	நாஞ்சில் மனோகரன்

ஆகியோரின் விளக்க உரைகள்

தி. மு. கழகத் தேர்தல் அறிக்கை மாநாட்டில் பிரகடனப்படுத்தப்படும்.

இரவு 10-மணிக்கு நாடகம் உண்டு.

மற்ற விவரங்கள் அடுத்து அறிவிக்கப்படும்.

—தலைமைக் கழகம் (தி. மு. க.)

கடைசிப் பக்கம்

எழுத்தாணி

வி. பன்னீர்செல்வம்; குடந்தை.

(?) காந்தியார் திடீரென்று இந்தியாவிற்கு வந்தால் என்ன நடக்கும்?

தற்கால காங்கிரசின் நிலைமை தெரிந்து நிச்சயம் அவர் தற்கொலை செய்து கொள்வார்!

வி. ஐயப்பன்; குளச்சல்.

(?) எல்லைத் தளபதி இப்போது எங்கேயிருக்கிறார்?

'விநாயக சதுர்த்தி' நடத்தி அவரை காங்கிரசார் அழைத்துக் கொண்டார்கள்; அவரது 'மூஞ்சூறு' வாகனம் மட்டும் இப்போது எல்லை காத்துக் கொண்டிருக்கிறது!

கே. எம். மணிசேகரன்; திருப்பூர்.

(?) காங்கிரஸ் ஆட்சியில் ஏன் அதிகமாக நோட்டு அடித்தார்கள்?

தேர்தலில் ஓட்டு வாங்க காங்கிரஸ் பண மூட்டைகளிடம் பணம் புழங்க வேண்டாமா; அதற்காகத்தான்!

பாம்பை பிரகாசம்; சென்னை-3.

(?) காமராசருக்கும் ஆண்டனி ஈடனுக்கும் உள்ள ஒற்றுமை என்ன?

ஈடன் நாசரை எதிர்த்து அழிந்தார்; இவர் இப்போதுதான் தி. மு. க. வை எதிர்க்க ஆரம்பித்திருக்கிறார்!

வி. ராமசாமி; உறையூர்.

(?) நேருப் பண்டிதர் சமீபத்தில் சென்னைக்கு வந்திருந்தாராமே: எப்படியிருக்கிறார்?

5—2—57-ம் தேதி 'விடுதலை'யை வாங்கிப் பாரும்; பண்டித நேருவின் சமீபத்திய படம் அதில் தான் வந்திருக்கிறது!

வி. கே. செல்வம்; பாளையங்கோட்டை.

(?) காங்கிரசிற்கு உள்ள மாபெரும் சக்தி எது?

பிரச்சார பலம்தான்! ஏனெனில் காங்கிரசிற்காக மெய்யைப் பொய்யாக்கிக் கூறுவதற்கு தினசரிகள் மட்டும் மித்திரன்; தினமணி; விடுதலை — போன்ற பல தேசிய ஏடுகள் இருக்கின்றனவே!

வி. சுந்தரமூர்த்தி; குடந்தை.

(?) இந்திரா காந்தியாரின் பெயர் இப்போது பத்திரிகைச் செய்திகளில் அடிபடுவதின் காரணம் என்ன?

ராஜ்குமாரி அமிர்த் கௌரி தேர்தலில் போட்டியிடவில்லை; எனவே அவருக்குப் பதில் அமைச்சரவையில் ஒரு நாற்கால் இவருக்கு காலியாக இருக்கிறது என்று கூறிக் கொள்கிறார்கள்!

கே. எஸ். சீனிவாசராகவன்; தஞ்சை.

(?) மிராசுதார்களின் சார்பாக சிலர் போட்டியிடும்போது, மில் முதலாளிகளின் சார்பாக; ஆலை அரசர்களின் சார்பாக ஏன் யாரும் போட்டியிடவில்லை?

காங்கிரஸ் கட்சிதான் அவர்களது பிரதிநிதியாக இருக்கும்போது அவர்கள் ஏன் தனியாகப் போட்டியிட வேண்டும்!

எல். கோபாலகிருஷ்ணன்; மன்னைநகர்.

(?) சுயேச்சைகள் என்பவர்கள் யார்?

மாட்டுப் பெட்டியை ஜெயிக்க வைப்பதற்காக வேறு பெட்டி வாங்கியிருக்கும் காங்கிரசின் கைப்பாவைகள்தான், அவர்களில் பெரும்பாலோர்!

திருத்தம் செய்வீர்!



இலங்கைத் தமிழர்: எழுந்திருங்கள், வீடு தீப்பிடித்துக் கொண்டு விட்டது.

இலங்கை சர்க்கார்: தொந்தரவு செய்யாதே — அற்புதமான ஒரு கனவு கண்டு கொண்டிருக்கிறேன்.

—இப்படி ஒரு கேலிச் சித்திரத்தையும், அதன் கீழே மேற்கண்ட வரிகளையும் வெளியிட்டிருக்கிறது, 'மித்திரன்' ஏடு!

இலங்கை தீப்பற்றிக் கொண்டு எரிகிறதாம்! ஆனால் அப்படி தீப்பற்றி எரிவதற்கான தமிழர்க்கு இழைக்கும் அநீதி போன்ற காரணங்களைக் களைந்தெறிய முன்வராமல் பண்டாரநாயகா சர்க்கார் உறங்குவதாகவும் சொல்கிறது 'மித்திரன்!'

அன்புள்ள 'மித்திரனாரே!' தூங்குவது பண்டாரநாயகா சர்க்கார் அல்ல; அது விழித்துக் கொண்டுதான் இருக்கிறது; அப்படி இருப்பதால்தான் தொடர்ந்து தமிழருக்கு அநீதி இழைக்க முடிகிறது. மித்திரனாரே!

இங்குள்ள பச்சைத் தமிழர் துரைத்தனமும்; பஞ்சசீலப் பண்டிதர் துரைத்தனமும்தான் தூங்கிக் கொண்டு இருக்கிறது!

ஆனால் இலங்கைவாழ் இளந் தமிழரோ உதவி! உதவி! என அவலக்குரல் கொடுக்கின்றனர்! சென்ற இலங்கைக் குடியரசு நாளில்கூட ஒரு தமிழன் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறான்! ஆனால் இந்த அழுகுரல் கேட்கவில்லை ஆனந்தக் கனவு கண்டு கொண்டிருக்கும் தேசியத்தாரின் ஆட்சி பீடத்திற்கு! அதனால்தான் மித்திரனாருக்குச் சொல்லிக்காட்ட ஆசைப்படுகிறோம், சித்திரம் இந்தக் கருத்தை விளக்குவதாகத் திருத்தப்பட வேண்டுமென்று!

தயாராகிறது... *தமிழ் விருந்து!*

சந்தன கருத்து சொல்லும்

முத்தாரம்

மார்ச் இதழில்

★ உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் ஓவியங்கள்!

★ சிந்தைக்கு விருந்தளிக்கும் சிறு கதைகள்; பெருங் கதைகள்!

★ அனைத்திலும் புதுமை மிக்கதாய் இனிமை கொண்டதாய்,

★ எழில் குலுங்கும் தமிழ்ப் பொழிலாய்த் தயாராகிறது!

நாடகத்தில்.....

❊ 5-ம் பக்கத் தொடர்ச்சி

போது, நாயனத்தைக் கையிலே வைத்துக் கொண்டு கம்பீரமாகப் பார்ப்பாயே; அந்தப் பார்வை எங்கே?"

"அறுபதாம் ஆண்டு விழா கொண்டாடலாம் சென்னையிலே என்று அழைத்து வந்தாயே; இதுதான் அறுபதாம் ஆண்டு விழாவா?...ஏ! இசையுலக ஜோதி! சொல்லு!"

இப்படித்தான் சோகத்திலே வார்த்தைகள் பிறிட்டுக் கிளம்பின; வழக்கு நடையிலே அல்ல; வண்ணத் தமிழ் நடையிலே!...நாடகத்தில் ஒரு கதாபாத்திரத்தில் நடிக்க அழகான நடிகர்களைத் தேர்ந்தெடுக்கிறோம். அதுபோலவே உரையாடலுக்கும் அழகான சொற்கள் தேவை!

உரையாடல் அழகாக அமைக்கப்படுவது என்றால் வெள்ளிக்குத் தங்க முலாம் பூசும் வேலையல்ல; குவிந்திருக்கும் முத்துக்களில் நன் முத்துக்களைப் பொறுக்கி ஆரம் தொடுப்பது போல! அந்த அழகு தமிழ் உரையாடல்-அர்த்தம் கெடாத உரையாடல் இடத்திற்கு ஏற்றவாறு, இயற்கையாகவோ, வழக்கு நடையாகவோ, அமைக்கப்பட்டு தமிழ்க் கலையரசியின் புகழை உயர்த்துகின்ற நிலையை வளர்க்க வேண்டும்; நாட்டுக்கு நலம் பயக்கும் நல்ல கொள்கைகளைப் பரப்ப வேண்டும் என்று தமிழக எழுத்தாளர் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்.

●●●